<u>தேதி - 11.08.2025</u>

**<u>O.S.No</u>**<u>.115/2019</u>

<u>பி.சா.1 - திரு. **P**.சுரேஷ்பாபு</u>

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் 1ம் பிரதிவாதி மாறனுக்கு பவர்ஏஜெண்ட் என்ற முறையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மோகன் என்னுடைய உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனக்கு மதுரை மேலமாசிவீதியில் கதவு எண்.1D8 என்ற முகவரியில் கடை உள்ளது என்றால் சரிதான், அது ஒரு மளிகை மற்றும் உலர்பழக்கடை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மோகனுக்கும் கீழமாசிவீதியில் கடை உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மாறன் எனக்கு 1992ல் இருந்தே பழக்கம். எனக்கு 1ம் பிரதிவாதி பொதுஅதிகாரம் வழங்கியது 21.06.2016 என்றால் சரிதான். பவர் பத்திரத்திற்கு முத்திரைதாள் மாறன் தான் வாங்கி கொடுத்தார். பவர் பத்திரத்திற்கு விபரங்கள் மாறன் தான் சொன்னார். பவர் பத்திரத்திற்கான முத்திரை தாள் வாங்கிய அன்றே தயாரிக்கப்பட்டதா அல்லது சிலநாட்கள் கழித்து தயாரிக்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பவர் பத்திரத்திற்கான முத்திரை தாள் வாங்கப்பட்ட தேதி 23.06.2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பவர் பத்திரம் எழுதப்பட்ட தேதி 21.06.2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனவே பவர் பத்திரம் போலியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பவர் பத்திரம் பதியப்படாத பத்திரம் என்றால் சரிதான். போலியான பவர் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கில் பிரதிவாதிகளுக்கு சாதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் எத்தனை எதிர்உரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு சரியாக தெரியவில்லை. இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து எதிர்உரைகளிலும் 1ம் பிரதிவாதியின் பவர்ஏஜெண்ட் என்ற அடிப்படையில் நான் தான் கையொப்பம் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் 1ம் பிரதிவாதியின்

கையொப்பம் தான் காணப்படுகிறது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் 22.01.2020ம் தேதி 1ம் பிரதிவாதி மாறன் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையில் எனது கையொப்பம் காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த கூடுதல் எதிர்வழக்குரையில் நான் 14.03.2024ம் தேதியன்று கையொப்பம் செய்து, இந்நீதிமன்றத்தில் 15.03.2024ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 21.06.2016ல் எனக்கு பொதுஅதிகாரம் எழுதிக் கொடுத்த பின் இந்த வழக்கில் 22.01.2020ல் அவராகவே எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதால் அவர் எனக்கு கொடுத்த பொதுஅதிகாரப்பத்திரம் தானாகவே இரத்தாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.2 (2 எண்ணம்) கார்பன் காப்பி என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் தேதி 11.07.2018 என்றால் சரிதான். அதில் கடை எண் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.3 ஆவணம் 24.07.2015ல் 1ம் பிரதிவாதிக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழங்கிய உத்தரவு என்றால் சரிதான், அது எனக்கு பவர் கொடுப்பதற்கு முந்தையதேதி ஆகும். 1ம் பிரதிவாதிக்கும், அசல் வாதிக்கும் உள்ள பிரச்சனை எனக்கு பவர் பத்திரம் கொடுத்த பிறகு தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் எதிர்உரை தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு நானும், மாறனும் சேர்ந்து தான் விபரம் சொன்னோம். மதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.741/2014 என்ற வழக்கிற்கு 1ம் பிரதிவாதியே தான் வழக்கறிஞருக்கு விபரம் சொன்னார். 1ம் பிரதிவாதியும், அசல்வாதியும் செய்து கொண்டதாக சொல்லும் வாடகை ஒப்பந்த பத்திரத்தை இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். வாடகை ஒப்பந்த பத்திரம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், அவ்வாறு தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஆங்கிலம் படித்து புரிந்து கொள்ள சிறிது தெரியும். பி.சா.ஆ.4 ஆவணம் என்ன ஆவணம் என்று தமிழில் மொழிபெயர்த்து எனது வழக்கறிஞர் கூறியிருப்பார், ஆனால் அது என்ன என்று தற்போது சொல்ல இயலவில்லை. 1ம்

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.சா.ஆ.7 ஆவணத்தில் தேதி 27.08.2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.8 ஆவணமானது மின்கட்டண அட்டையின் புகைப்படநகல் என்று சொன்னால் சரிதான், அதில் பயனீட்டாளர் பெயர் மாரியம்மாள் என்று உள்ளது என்று சொன்னால் சரிதான். மாரியம்மாள் அசல் வாதி கனகவேல் என்பவரின் அம்மா என்றால் சரிதான். பி.சா.ஆ.8 ல் 2020 முதல் 2022 வருடம் வரை அளவீடு குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.9 ஆவணமான மின்கட்டண இரசீதுகள் 2021 முதல் 2022 வரை உள்ளது என்றால் சரிதான். எங்களது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நான் மதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.741/2014 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை ஆகியவற்றின் சான்றிட்ட நகல்கள் என்றால் சரிதான். அவைகள் முறையே, **வா.சா.ஆ.8** மற்றும் **வா.சா.ஆ.9** ஆகும். மேற்படி வழக்கின் தீர்ப்புக்கு மேல்முறையீடு சென்றேன் என்றால் சரிதான். மேல்முறையீடானது இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் A.S.No.62/2023 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி A.S.No.62/2023 ஆனது 24.10.2024 ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த A.S.No.62/2023 ன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஆகியவற்றின் சான்றிட்ட நகல்கள் என்றால் சரிதான். அவைகள் முறையே, **வா.சா.ஆ.10** மற்றும் **வா.சா.ஆ.11** ஆகும். அந்த மேல்முறையீட்டை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்கு 1 ம் பிரதிவாதி மேல்முறையீடு செய்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த மேல்முறையீட்டை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்கு இன்றைய தேதி வரை 1 ம் பிரதிவாதி மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றும், மேற்படி விபரம் தெரிந்தும் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.741/2014 ல் என்னை குறுக்குவிசாரணை செய்யும் போது, இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இந்த அ.வ.எண்.115/2019 ல் நீதிமன்றம் உத்தரவிடும்பட்சத்தில் காலி செய்ய தயாராக உள்ளோம் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சாட்சியத்தில் பட்டாசு

உரிமத்தை வாதி பயன்படுத்துவது தொடர்பாக எவ்வித ஒப்பந்தமும் ஏற்படுதத்பபடவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா கடையை மாறன் மட்டும் தான் நடத்தி வருகிறார், நான் அவருக்கு ஆதரவாக இருந்து வருகிறேன். அ.வ.எண்.741/2014 ல் நான் சாட்சியம் அளிக்கும் போது, தாவா கடையில் நான் தான் தற்போது மளிகை கடை வைத்துள்ளேன் என்றால் நானும், வாதியும் சேர்ந்து செய்கிறோம் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மாறனுக்கு தற்போது 54 அல்லது 55 வயது இருக்கும். மதுரை வில்லாபுரத்தில் அவரது வீடு அமைந்துள்ளது. அவர் திடகாத்திரமாக உள்ளார் என்றால் சரியல்ல, அவருக்கு உடல்நிலை சரியில்லை. அசல் வாதி கனகவேல் தாவா சொத்தில் கடை நடத்தி வந்தார் என்றும், அவரிடம் மாறன் சம்பளத்திற்கு வேலை பார்த்து வந்தார் என்றும், வயோதிகம் மற்றும் நரம்பு தளர்ச்சியின் காரணமாக கனகவேல் வியாபாரத்தை நிறுத்திவிடப் போவதாகவும், மாறன் வேறு வேலை பார்த்து கொள்ள வேண்டும் என்றும் கூறினார் என்றாலும், அதனை கேள்விப்பட்ட நானும், எனது சகோதரரான 2 ம் பிரதிவாதியும் மாறனுக்கு ஆசைவார்த்தை கூறி, தாவா கடையை வாதியிடம் இருந்து, அபகரிக்கும் நோக்கோடு வழக்கு வியாஜ்ஜியங்கள் செய்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா கடை அசல் வாதி கனகவேலுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். அசல்வாதி கனகவேல் 1 ம் பிரதிவாதிக்கு ஒரு பாக்கெட் நோட்டில் 2001 ம் வருடம் முதல் வாடகையை வரவு வைத்து கொடுத்துள்ளார். 2001 ம் வருடம் முதல் ஏதாவது ஒரு வருடத்திற்கான பாக்கெட் நோட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் 2006 ம் ஆண்டு அசல் வாதி பாக்கெட் நோட்டை திருப்பி தரவில்லை. அ.வ.எண்.741/2014 ல் 05.10.2014 ம் தேதி இந்த வழக்கின் அசல் வாதி கனகவேல் திருப்பி கொடுக்காமல் வைத்து கொண்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கின் விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாததால் ஒவ்வொரு நீதிமன்றத்திலும் ஒவ்வொரு விதமாக மாற்றி மாற்றி கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் 1 ம் பிரதிவாதியும், 2 ம் பிரதிவாதியும் அசல் வாதிக்கு பாத்தியமான கடையில் அக்கிரம பிரவேசம் செய்து கடையை அவர்களது சுவாதீனத்தில் வைத்துள்ளார்கள் என்றும், 2 ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரர் என்பதால் தாவா கடையை

வாதிகளிடம் இருந்து அபகரிக்கும் நோக்கோடு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், 2ம் பிரதிவாதியும் இதே போல் வாடகைக்கு இருப்பவர்களை தூண்டிவிட்டு, மதுரை நகரில் பல்வேறு கடைகளை உரிமையாளர்களிடம் இருந்து அபகரித்து உள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி நல்ல திடகாத்திரமாக உள்ளார் என்றும், அவர் சாட்சியம் அளித்தால் நீதிமன்றத்திற்கு பல உண்மைகள் தெரிய வரும் என்பதால் ஒரு போலியான பொதுஅதிகார பத்திரத்தை உருவாக்கி, அதன்மூலம் நான் இந்த நீதிமன்றத்தில் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.08.12 10:18:04 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.